பக்கங்கள் 18 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 25 திங்கட்கிழமை 09.03.2026 | அதிர்வு 222

இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவால்

## சஜின் வாஸ் இன்று கைது!



காலி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன,

02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# மூன்று மாதங்களுக்குள் அறிக்கை கிடைத்தால் இவ்வருடம் தேர்தல் உறுதி

## விசேட தெரிவுக்குழுவுக்கு ரத்நாயக்க கெடு

மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முறைமை குறித்து ஆராய நியமிக்கப்பட்டுள்ள விசேட தெரிவுக்குழு, எதிர்வரும் மூன்று மாத காலத்துக்குள் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்குமாயின், இந்த ஆண்டுக்குள்ளேயே தேர்தலை நடத்த முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் நிலவும் 02▶

## சிதைவடையும் நிலையில் ஈரான் கடற்படையினரின் சடலங்கள்; இராஜதந்திரத் தாமதத்தால் வைத்தியசாலை நிர்வாகம் திணறல்!



அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலால் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட ஈரானியப் போர்க் கப்பலில் உயிரிழந்த 87 கடற்படையினரின் உடல்களைப் பாதுகாப்பதில் காலி – கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை நிர்வாகம் பாரிய சவால்களை எதிர்கொண்டு வருகின்றது.

இவ்விடயம் குறித்து வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.டி.யு.எம். ரங்க ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்

“ஒரே நேரத்தில் 87 உடல்கள் கொண்டு வரப்பட்டமையால், 02▶

# தங்கக் கடத்தலை அதிரடியாக முறியடித்த கடற்படை! பல கோடி ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகள் மீட்பு!!

## இரு சந்தேகநபர்கள் காங்கேசன்துறை சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைப்பு

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்ப்பாணம், மாதகல் கடல் வழியாகப் படகு மூலம் இந்தியாவுக்குப் பெருந்தொகைத் தங்கத்தைக் கடத்திச் செல்ல முயன்ற இருவரைக் இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இன்று மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, சுமார் 6 கிலோவுக்கும் அதிக எடையுடைய தங்கக் கட்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

மாதகல் கடற்பரப்பினூடாகச் சர்வதேச கடல் எல்லை வழியாகத் தங்கம் கடத்தப்படுவதாகக் கடற்படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. இதனைத் தொடர்ந்து, அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த படகொன்றை நடுக்கடலில் வழிமறித்துச் சோதனையிட்டனர்.

கடற்படையினரின் தீவிர சோதனையின் போது, அந்தப் படகிலிருந்து 6 கிலோ 85 கிராம் எடையுடைய தங்கக் கட்டிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும், அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட தங்கம் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட படகு என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் காங்கேசன்துறை சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான கடல் மார்க்கக் கடத்தல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், வடக்குக் கடற்பரப்பில் கடற்படையினர் தமது கண்காணிப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மூன்று மாதங்களுக்குள்...

இழுபறிகள் குறித்து ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட கலப்புத் தேர்தல் முறைமையில், எல்லை நிர்ணயப் பணிகள் நிறைவடையாத காரணத்தினால் கடந்த பல வருடங்களாக மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகள் இன்றி இயங்கி வருகின்றன.

பழைய விகிதாசார முறைமையில் தேர்தலை நடத்துவதா அல்லது புதிய கலப்பு முறைமையில் நடத்துவதா என்பது குறித்து நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என உயர்நீதிமன்றம் ஏற்கனவே பலமுறை வியாக்கியானம் வழங்கியுள்ளது.

இது தொடர்பாகத் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேர்தல் முறைமை மற்றும் சட்டத் திருத்தங்களை ஆராய நியமிக்கப்பட்டுள்ள விசேட குழு, எதிர்வரும் மே மாதத்துக்குள் (மூன்று மாத கால அவகாசம்) தனது விதப்புரைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

குறித்த குழுவில் முன்னிலையாகி தேர்தல்கள் ஆணைக்குழு சார்பான யோசனைகளை முன்வைக்கவுள்ளோம். அரசு எடுக்கும் ஆக்கபூர்வமான தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும்.

எல்லை நிர்ணயப் பணிகள் முடியும் வரை பழைய விகிதாசார முறைமையிலாவது தேர்தலை நடத்தி, மாகாண சபைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும் என்பதில் ஆணைக்குழு உறுதியாக உள்ளது.

தெரிவுக்குழுவின் அறிக்கை கிடைத்தவுடன், சட்ட ரீதியான அதிகாரங்களைப் பயன்படுத்தித் தேர்தலை நடத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆணைக்குழு உடனடியாக ஆரம்பிக்கும். இதன் மூலம் நீண்டகாலமாகத் தாமதிக்கப்பட்டு வரும் மாகாண சபைத் தேர்தலை இந்த ஆண்டின் இறுதிக்குள் நடத்த முடியும்."

– என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

### சிதைவடையும் நிலையில்...

அவற்றைப் பிரேத அறையில் பாதுகாப்பாக வைப்பதில் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. வைத்தியசாலையில் போதிய குளிரூட்டி வசதிகள் இல்லாத நிலையில், உடல்கள் சிதையாமல் இருக்கத் தற்காலிக ஏற்பாடுகள் மூலம் அவை தற்போது பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இந்த உடல்களை இன்னும் எவ்வளவு காலத்துக்கு வைத்தியசாலையில் வைத்திருக்க வேண்டும் என்பது குறித்து எமக்கு இதுவரை எவ்வித உத்தியோகபூர்வ தகவல்களும் வழங்கப்படவில்லை.

இந்த விவகாரம் தொடர்பில் சுகாதார அமைச்சு, வெளிவிவகார அமைச்சு மற்றும் ஈரானியத் தூதரகம் ஆகியவற்றுக்கு இடையே நடைபெற்று வரும் இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகள் பற்றி எமக்குத் தெரியாது.

இந்த உடல்களை இலங்கையிலேயே அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டால், மாநகர சபை மற்றும் பொதுமக்களின் உதவியுடன் ஒரே நாளில் அந்தப் பணிகளை எம்மால் நிறைவு செய்ய முடியும். ஆனால், உடல்களைத் திருப்பி அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டால், அவற்றை நீண்டகாலம் பாதுகாப்பது வைத்தியசாலை நிர்வாகத்துக்குப் பெரும் சுமையாக அமையும்." – என்றார்.

இலங்கைக்கு அப்பால் சர்வதேச கடற்பரப்பில் பயணித்துக் கொண்டிருந்த ஈரானியப் போர்க்கப்பல் மீது அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் நடத்திய தாக்குதலில் 87 பேர் கொல்லப்பட்டனர். அவர்களின் உடல்களே தற்போது இராஜதந்திரத் தீர்மானங்களுக்காகக் காத்திருக்கும் நிலையில் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

### சஜின் வாஸ்...

இலஞ்ச, ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் அதிகாரிகளால் இன்று கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் சொத்துக் குவித்தார் என்று முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளுக்காக அவர் இன்று காலை ஆணைக் குழுவில் முன்னிலையாகியிருந்த நிலையிலேயே இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் நீண்டகாலமாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், வாக்குமூலம் வழங்குவதற்காகச் சஜின் வாஸ் குணவர்தன இன்று காலை இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அங்கு அவரிடம் பல மணிநேரம் வாக்குமூலம் பெறப்பட்டது. அந்த வாக்குமூலத்தைப் பதிவு செய்து கொண்ட அதிகாரிகள், விசாரணைகளின் அடிப்படையில் அவரை உடனடியாகக் கைது செய்தனர்.

அவர் நாடாளுமன்ற உறுப்பினராகவும், அரச உயர்மட்டப் பதவிகளிலும் இருந்த காலப்பகுதியில், வருமானத்துக்குப் புறம்பாகச் சொத்துக்களைச் சேர்த்தார் என்று பல முறைப்பாடுகள் ஆணைக் குழுவுக்குக் கிடைத்துள்ளன. இது தொடர்பாக ஏற்கனவே பல கட்டங்களாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச மேடையில் ஹரிணியின் குரல்!

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் மகளிர் தின நிகழ்வில் விசேட உரை











ஆசிய அபிவிருத்தி வங்கியின் விசேட அழைப்பின் பேரில், சர்வதேச மகளிர் தின நிகழ்வுகளில் பங்கேற்பதற்காகப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பிலிப்பைன்ஸின் மணிலா நகருக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இலங்கையிலிருந்து புறப்பட்ட பிரதமர், இன்று திங்கட்கிழமை காலை மணிலாவிலுள்ள நினோய் அக்வினோ சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தார்.

விமான நிலையத்தை வந்தடைந்த பிரதமரை, பிலிப்பைன்ஸிற்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி சானக்க தல்பஹேவா, பிலிப்பைன்ஸ் அரசின் உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து உத்தியோக பூர்வமாக வரவேற்றனர்.

மணிலாவிலுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைமையகத்தில் நடைபெறவுள்ள சர்வதேச மகளிர் தின விழாவில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

இந்தப் பயணத்தின்போது பிலிப்பைன்ஸ் அரசின் முக்கிய அமைச்சர்களைச் சந்தித்துப் பிரதமர் கலந்துரையாடவுள்ளார்.

இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கிடையிலான பரஸ்பர நலன் சார் விடயங்கள், இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களுக்கு மத்தியில், சர்வதேச ரீதியிலான ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்வதில் பிரதமரின் இந்த விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மீண்டும் பழைய பல்லவியா?

யுத்தம் என்னவோ மத்திய கிழக்கில்தான். ஆனால் தெற்காசியாவில் இருக்கும் இலங்கையிலும் யுத்தத்தின் நெருக்கடி மோசமாகத் தாக்காமல் இல்லை. அதன் விளைவுகளை நாமும் நேரடியாக எதிர்கொள்ள வேண்டி இருக்கின்றது.

மேற்கு ஆசியாவில் போதுமான அளவு இருப்பு இருந்தபோதிலும், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் தொடர்ந்தால் விலைகள் எகிறக் கூடும் என்று உணவுப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது போதுமான அளவு அத்தியாவசியப் பொருள்கள் இருப்பு உள்ளன. இலங்கையால் மேற்கு ஆசியா, பாகிஸ்தான் மற்றும் பல நாடுகளிலிருந்து அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்ய முடியாவிட்டாலும், அவை அனைத்தையும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு இன்னும் உள்ளது. இருப்பினும், கப்பல் சரக்குக் கட்டணங்கள் ஏற்கனவே அதிகரித்துள்ளன. ஒரு கொள்கலனுக்கான விலை ரூ. 65,000 இலிருந்து ரூ. 80,000 ஆக அதிகரித்துள்ளது என சங்கத்தின் செயலாளர் பி. சுப்பிரமணியம் கூறுகின்றார்.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பெரும்பாலான பொருள்கள் துபாய் வழியாகவே வருகின்றன, எனவே போர் காரணமாக கடல்சார் காப்பீட்டுக் கட்டணங்கள் அதிகரித்துள்ளன.

“கென்டெய்னர்களைக் கொண்டு வருவதில் சிரமங்கள் இருக்கலாம் என்று நாங்கள் நம்புகிறோம். இந்தியா, ரஷ்யாவிலிருந்து எண்ணெயைப் பெற முடியும் என்பது நல்லது. இல்லையெனில் அந்தப் பிரச்சினையும் இலங்கையைப் பாதிக்கும். மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய முடியாவிட்டாலும், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யலாம். இருப்பினும், அனைத்தும் மேற்கு ஆசிய எண்ணெய் விநியோகத்தைப் பொறுத்தது. அந்த விநியோகம் தடைப்பட்டால், நாடுகள் ஒன்றுக்கொன்று உதவுவது கடினமாகிவிடும்” என்று அவர் எச்சரிக்கின்றார்.

இதற்கிடையில், வரவிருக்கும் பெரும்போக சாகுபடிப் பருவத்திற்குத் தேவையான யூரியா கையிருப்பு நாட்டில் போதுமான அளவு இருப்பதாக தேசிய உரச் செயலகம் உறுதிப்படுத்தியது.

தற்போது 105,000 மெட்ரிக் தொன் யூரியா, 35,000 மெட்ரிக் தொன் மண் உரம் மற்றும் 39,000 மெட்ரிக் தொன் எம்.ஓ.பி. உரம் கையிருப்பில் உள்ளன. கூடுதலாக, இரண்டு வாரங்களுக்கு முன்பு 30,000 மெட்ரிக் தொன் யூரியா இறக்குமதி செய்யப்பட்டதாகவும், மேலும் 60,000 மெட்ரிக் தொன் சீனாவிலிருந்து ஓடர் செய்யப்பட்டுள்ளதாகவும் தேசிய உரச் செயலக இயக்குநர் சந்தன லோகுஹேவகே கூறுகின்றார்.

இவற்றின்படி பார்த்தால் யுத்தம் தொடர்ந்தாலும் உடனடியாக நெருக்கடிகளை இலங்கை எதிர்கொள்ளாமல் சமாளிக்க கூடியதாக இருக்கும். ஆயினும் மத்திய கிழக்கு யுத்தம் வாரங்கள் கடந்து, மாதக் கணக்குகளை எட்டுமாயின் இலங்கை மீண்டும் 2022 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டு விடும் என்றே தோன்றுகின்றது.

# இரண்டே மாதங்களில் 422 பேர் பரிதாபப் பலி!

## இலங்கையில் கோரத்தாண்டவமாடும் வீதி விபத்துக்கள்




இவ்வருடத்தின் கடந்த இரண்டு மாத காலப்பகுதியில் மாத்திரம் இலங்கையில் இடம்பெற்ற வீதி விபத்துக்களினால் 400 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் மார்ச் மாதம் 2 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பதிவான விபத்துக்கள் தொடர்பான தரவுகளிலேயே இந்த அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் மொத்தமாக 3 ஆயிரத்து 600 இற்கும் மேற்பட்ட வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

மிக மோசமான 405 விபத்துச் சம்பவங்களில் சிக்கி 422 பேர் உயிரிழந்துள்ளனர்.

866 விபத்துச் சம்பவங்கள் பாரதூரமானவை என அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

1,730 விபத்துச் சம்பவங்களில் பலர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

641 விபத்துக்களில் வாகனங்கள் மற்றும் ஏனைய உடமைகளுக்குப் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கும், பெறுமதியான மனித உயிர்களைப் பாதுகாப்பதற்கும் வாகனச் சாரதிகள் மற்றும் பாதசாரிகள் வீதி ஒழுங்குமுறைகளையும், பாதுகாப்பு நடைமுறைகளையும் முறையாகப் பின்பற்ற வேண்டும் என்று பொலிஸ் அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

அதிவேகம், கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்துதல் மற்றும் வீதி விதிகளை மீறுதல் போன்றவையே இவ்வாறான விபத்துக்களுக்குப் பிரதான காரணங்களாக அமைவதாகவும் பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# வைரல் காணொளியால் சிக்கிய வீதிச் சண்டியன்

## பொலிஸாரின் கழுகுப் பார்வையில் வீழ்ந்த அபாயகரமான மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்



**(க.மகாதேவன்)**

பொதுமக்களுக்கும் ஏனைய வாகனங்களுக்கும் இடையூறு விளைவிக்கும் வகையில், வீதியில் ஆபத்தான முறையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய இளைஞர் ஒருவர் நவகத்தேகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவிய காணொளி ஒன்றை ஆதாரமாகக் கொண்டே இந்தக் கைது நடவடிக்கை நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இரு இளைஞர்கள் வீதியில் அபாயகரமான முறையில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி, ஏனைய பயணிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் காட்சிகள் அடங்கிய காணொளி அண்மையில் சமூக வலைத்தளங்களில் பரவியது. இது குறித்து விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், அந்த மோட்டார் சைக்கிள் ஆனமடுவ பகுதியை நோக்கிச் செலுத்தப்பட்டதை உறுதிப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து நவகத்தேகம பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, நேற்று மாலை சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். இதன் போது அவர் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் நவகத்தேகம பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளின் பின்னர் ஆனமடுவ நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், நவகத்தேகம பொலிஸார் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வெறும் பூங்கொத்துகளுடன் முடிந்துவிடாது மகளிர் தினம்

## பெண்களின் போராட்ட வரலாற்றை நினைவுகூர்ந்த பிரதமர்












“பெண்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் சட்டப் புத்தகங்களுக்குள் மட்டும் முடங்கிவிடாமல், அவை ஒவ்வொரு பெண்ணும் நிஜ வாழ்க்கையில் அனுபவிக்கக்கூடிய யதார்த்தமாக மாற்றப்பட வேண்டும்” என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

“வளமான நாட்டின் அபிமானம் – அவளே நாட்டின் முன்னோடி” எனும் தொனிப்பொருளில் மாத்தறை, ருஹுணு பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச மகளிர் தினத் தேசிய விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு பிரதமர் மேலும் உரையாற்றுகையில்

“இன்று பெண்கள் அனுபவிக்கும் கல்வி மற்றும் அரசியல் உரிமைகள் உள்ளிட்ட சகல சுதந்திரங்களும், வரலாறு நெடுகிலும் பெண்கள் முன்னெடுத்த பாரிய போராட்டங்களின் விளைவுகளாகும். இந்த நாளை வெறும் பூங்கொத்துக்களுடன் மட்டும் சுருக்கிவிட முடியாது. அந்த உரிமைகளைப் பாதுகாத்து, பெண்களின் வாழ்க்கையை தற்போதைய நிலையை விட உயர் இடத்திற்குக் கொண்டு செல்வதே அரசின் உன்னத நோக்கமாகும்.

பெண் தொழில்முயற்சியாளர்களின் தயாரிப்புகள் அந்தந்தப் பிரதேசங்களுக்குள் மட்டும் முடங்கிவிடக்கூடாது. அவர்களைத் தேசிய பொருளாதாரத்தின் நேரடிப் பங்காளிகளாக மாற்றும் பின்னணியை அரசு உருவாக்கி வருகின்றது. அதேபோல், பெண்கள் ஊதியம் பெற்றோ அல்லது பெறாமலோ மேற்கொள்ளும் அர்ப்பணிப்பை மதிப்பீடு செய்ய ”தேசிய பராமரிப்புக் கொள்கை” ஒன்றை அறிமுகப்படுத்தும் யோசனையை நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் முன்வைத்துள்ளது.

உலகில் நிலவும் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில், மனிதநேயத்துக்காகவும் அமைதிக்காகவும் முன்னிற்க வேண்டிய பெரும் பொறுப்பு பெண்களுக்கு உள்ளது. எனவே, கருணையுடன் ஒன்றிணைந்து அமைதிக்காகக் குரல் எழுப்புமாறு இந்நாட்டுப் பெண்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.” – என்றார்.

இவ்விழாவில் உரையாற்றிய மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ்,

“நாட்டின் டொலர் கையிருப்பை அதிகரிப்பதற்காக வெளிநாடுகளில் பணிபுரியும் பெண்கள் சிந்திய கண்ணீர் மற்றும் வியர்வைக்குச் சரியான மதிப்பினை வழங்கும் யுகம் தற்போது உதயமாகியுள்ளது. பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அனைத்து அமைச்சுக்களையும் ஒருங்கிணைத்த விரிவான கட்டமைப்பு விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.” – என்றார்.

இந்தத் தேசிய விழாவின் ஓர் அங்கமாக, நாடு முழுவதிலுமிருந்து தெரிவு செய்யப்பட்ட 25 சிறந்த பெண் தொழில் முயற்சி வெற்றியாளர்களுக்குப் பிரதமரால் கௌரவ விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, பிரதி அமைச்சர் வைத்தியர் நாமல் சுதர்சன, தென் மாகாண ஆளுநர், வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# மலையக மக்களை மாற்றான் தாய் பிள்ளைகளாக நடத்த வேண்டாம்!

## ஜனாதிபதி அநுரவுக்கு மனோ எம்.பி. கடும் எச்சரிக்கை




மலையகப் பெருந்தோட்ட மக்கள் அனைவருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாகக் காணி உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலை வரும் கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

கொட்டக்கலையில் நேற்று நடைபெற்ற "மலையக வாழ்வுரிமை மாநாட்டில்" கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாநாட்டில் தொடர்ந்தும் உரையாற்றிய மனோ கணேசன் எம்.ப். குறிப்பிட்டதாவது:-

"காணி, வீடு, மற்றும் நியாயமான ஊதியம் ஆகிய மூன்றே ஒரு சமூகத்தின் வாழ்வுரிமையைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகளாகும். இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்கள் ஏனைய சமூகங்களை விடப் பொருளாதார ரீதியாகப் பின்தங்கியுள்ளனர். எனினும், நாம் எவருக்கும் தாழ்ந்தவர்கள் அல்ல. 1948-இல் பறிக்கப்பட்ட எமது குடியுரிமை, நீண்ட போராட்டங்களுக்குப் பின்னரே மீளப் பெறப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கத்தின் நான்கு வருடக் காலப்பகுதியில் மாத்திரமே நாம் அதிகாரத்தில் இருந்தோம். அந்தக் குறுகிய காலத்தில் 7 பேர்ச் காணி உரிமை, தனி வீட்டுத் திட்டம், மலையக அதிகார சபை மற்றும் பாடசாலை களுக்கான காணி ஒதுக்கீடு போன்ற பல அபிவிருத்திகளை முன்னெடுத்தோம். ஆனால், 40 வருடங்களாகப் பல்வேறு அரசாங்கங்களுடன் ஒட்டிக்கொண்டி ருந்தவர்கள் எதனையும் செய்யவில்லை." – என்றார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விடம் கோரிக்கை விடுத்த அவர், மலையக மக்களுக்கு வெறும் "கண்காட்சிகளை" காட்ட வேண்டாம் எனவும், முறையான ஆட்சியை வழங்குமாறும் கேட்டுக் கொண்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"பெருந்தோட்டங்களில் வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும், அங்கு வாழும் அனைத்து மக்களுக்கும் காணி உரிமை வழங்கப்பட வேண்டும். பயிரிடப்படாத காணிகளை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதாக "ஹட்டன் பிரகடனத்தில்" ஜனாதிபதி அறிவித்திருந்தார். ஆனால் அது இன்னும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை.

அனுராதபுரம் மற்றும் குருணாகல் பகுதிகளில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 50 இலட்சம் ரூபாய் வழங்கி உதவிய அரசாங்கம், மலையகப் பாதிக் கப்பட்ட மக்களுக்கு அந்த உதவியை வழங்கவில்லை. நாம் ஒன்றும் மாற்றான் தாய் பிள்ளைகள் அல்லர்." – என்றார்.

டிக்கோயா – கிழங்கன் ஆதார வைத்தியசாலையின் பிணவறையில் சகோதரி ஒருவரின் சடலத்திற்கு நேர்ந்த அசாம்பவிதம் தொடர்பில் தான் உரிய அமைச்சருடனும் பொலிஸ் அதிகாரிக ளுடனும் பேசியுள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இது குறித்து நாளைக்குள் முறையான நடவடிக்கை எடுக்கப்படா விட்டால் பாரிய தொழிற்சங்க நடவடிக்கை களை முன்னெடுக்க நேரிடும் என்றும் எச்சரித்தார்.

இறுதியாக, மலையகத்தில் விரைவில் ஒரு பலமான "தொழிற்சங்க சம்மேளனம்" உருவாக்கப்படும் என்றும் அவர் இதன்போது பிரகடனம் செய்தார்.

# தொடர் சங்கிலிப் பறிப்பில் ஈடுபட்ட கொள்ளையன் வசமாகச் சிக்கினார்

## பொதுமக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைப்பு



(க.மகாதேவன்)

புத்தளம், வென்னப்புவ மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் வீதியில் செல்லும் பெண்களை இலக்கு வைத்துத் தங்கச் சங்கிலிகளை கொள்ளையிட்டு வந்த நபர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வென்னப்புவ – வைக்காலை, அங்கம்பிட்டிய பிரதேசத்தில் வைத்தே இந்த கைது நடவடிக்கை இடம்பெற் றுள்ளது.

நேற்று மாலை, வைக்காலை பகுதி யில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பெண்ணொருவரின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைச் சந்தேகநபர் அறுத்துக் கொண்டு மோட்டார் சைக்கி ளில் தப்பியோட முயன்றுள்ளார். இதன் போது, பாதிக்கப்பட்ட பெண் எழுப்பிய அபயக் குரலையடுத்து, உடனடியாகச் செயற்பட்ட அப்பகுதி பொதுமக்கள் சந்தேகநபரைத் துரத்திச் சென்று பிடித்துள்ளனர்.

பிடிபட்ட நபர் வென்னப்புவ பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். விசார ணைகளின் போது, அவர் களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மல்வத்தை வீதியைச் சேர்ந்த 29 வய துடையவர் என அடையாளம் காணப் பட்டுள்ளார்.

அத்துடன், கொள்ளைச் சம்பவங்க ளுக்கு அவர் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட் டுள்ளாரா? அல்லது இவருடன் வேறு எவருக்கும் தொடர்புள்ளதா? என்பது குறித்து வென்னப்புவ பொலிஸார் பல்வேறு கோணங்களில் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ள னர்.



# அட்டாளைச்சேனையில் இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

**(அபு அலா, எஸ்.எம்.அறூஸ்)**

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சமூக, கலாச்சார மற்றும் கல்விப் பிரிவின் ஏற்பாட்டில், ரமழான் மாதத்தை முன்னிட்டு இளைஞர்களுக்காக "குரவரசந டுநயனநச" திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட "ஐளடயஅஉை டுகைந ளுவரனநைள" ஏழு நாள் பயிற்சி நெறி நாடளாவிய ரீதியில் நிறைவு பெற்றுள்ளது.

நாட்டின் 21 நிலையங்களில், 35 இற்கும் மேற்பட்ட வளவாளர்களின் பங்களிப்புடன் ஒரே பாடத்திட்டத்தின் கீழ் நடைபெற்ற இப்பயிற்சி மூலம் 1000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

இந்தத் திட்டத்தில் மாணவர்களின் நல்லொழுக்கம், ஒற்றுமை, கட்டுப்பாடு மற்றும் சமூகப் பொறுப்பை உணர்ந்து, எதிர்காலத்தில் சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயனுள்ள சிறந்த பிரஜைகளாக உருவாக அடித்தளமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனடிப்படையில், அட்டாளைச்சேனை – அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் நடைபெற்ற பயிற்சி நெறியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் இப்தார் நிகழ்வும் அட்டாளைச்சேனையில் நடைபெற்றன. அத்தோடு வளவாளர்களும் இங்கு பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினரும், உயர்பீட உறுப்பினருமான தொழிலதிபர் எஸ்.எம்.சபீஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில், யுஊஆஊ கட்சியின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்ரப் தாஹிர், யுஊஆஊ கட்சியின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் எம்.எஸ்.ஜஃபர், அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினர் சபூர் ஆதம், கட்சி முக்கியஸ்தர் காதர் சேர் உள்ளிட்ட வளவாளர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.









# இழுபறியில் இருந்த நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் பதவி றியாஸ் ஆதம் வசமானது!







(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரின் உறுப்புரிமை நீக்கப்பட்டமையை அடுத்து தவிசாளர் பதவி வெற்றிடமாக இருந்த நிலையில் புதிய தவிசாளரை தெரிவு செய்வதற்கான சபைக் கூட்டம் இடம்பெற்றது. ஆனால் முதல் இரு அமர்வுகளில் தவிசாளர் தேர்வு நடைபெறவில்லை.

பிரதேச சபையில் பல கட்சிகள் உறுப்பினர்களைக் கொண்டிருந்ததால், யார் தவிசாளராக வர வேண்டும் என்ற விவகாரத்தில் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை இல்லாமல் இருந்தது. இதனால் இரண்டு முறை தவிசாளர் தெரிவு இழுபறியாகியது.

தவிசாளர் இல்லாததால் சபையின் நிர்வாக நடவடிக்கைகள் சீராக நடைபெறவில்லை. குறிப்பாக 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் கூட முன்வைக்க முடியாத நிலை ஏற்பட்டது. இந்த நிலை காரணமாகத் தவிசாளர் தெரிவு நடைபெறும்வரை சில நிர்வாகப் பொறுப்புகளை அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இதற்குப் பின்னர் இறுதியாக இன்று நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு நடைபெற்றது.

இரு தடவைகள் இழுபறியில் நிலவிய நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு இன்று நடைபெற்றது. இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டத்தரணி றியாஸ் ஆதம் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

நிந்தவூர் பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல். அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

வாக்கெடுப்பின் மூலம் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினரும் சட்டத்தரணியுமான றியாஸ் ஆதம் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

# புத்தளம் சித்தி விநாயகர் ஆலயத்துக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் விக்கிரகங்கள்











புத்தளம் மாவட்டம் கற்பிட்டி வீதி, அம்மாதோட்டம் பள்ளி வாசல் துறையில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்துக்கு, 650,000 ரூபா பெறுமதியான கலங்கல் விக்கிரகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

விநாயகர் ஆசனக்கல்லுடன் (3 அடி), சிவலிங்கம் ஆசனக்கல்லுடன் (1.5 அடி), பார்வதி ஆசனக்கல்லுடன் (16 இஞ்சி) , வைரவர் (16 இஞ்சி), 3அடி விநாயகருக்கு ஏற்றால் போல் மூசிகம் - 1, பலிபீடம் - 1 ஆகிய கருங்கல்லிலான விக்கிரகங்கள் (சிலைகள்) வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று இவற்றை வழங்கி வைத்தார்,

பெரும்பான்மையின மக்களும் இஸ்லாம் சமயத்தை பின்பற்றும் சமூகத்தினரும் அதிகளவில் வாழும் இந்தப் பிரதேசத்தில் அன்றாடம் கூலியைத் தொழிலாகக் கொண்ட 40 தமிழ் சைவ குடும்பங்களே வசிக்கின்றனர்.

# கொட்டகலை பத்திமா ஆலய சிலுவைப் பாதை நிகழ்வுகள்









**(எஸ். ரோஷன்)**

தவக்காலத்தின் மூன்றாம் வாரத்தை முன்னிட்டு இயேசு கிறிஸ்துவின் பாடுகளை நினைவு கூரும் புனித சிலுவைப் பாதை நிகழ்வு கொட்டகலை புனித பத்திமா தேவாலயத்தில் ஆலய பங்குத் தந்தை அருட்பணி ஜேசுதாசன் அடிகளார் மற்றும் பங்கு மக்களின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

இந்நிகழ்வானது கொட்டகலை புனித பத்திமா தேவாலயத்தில் இருந்து ஆரம்பித்து, இயேசு கிறிஸ்து தனது வாழ்வின் இறுதி நாள்களில், தண்டனை விதிக்கப்பட்டது முதல் சிலுவையில் உயிர் துறந்து, கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டது வரை, அவர் சந்தித்த துன்பங்களை நினைவு கூர்ந்து, 14 நிலைகளாக, கொட்டகலை நகர் வழியாகத் தியானித்துக் கொட்டகலை லொக்கில் அந்தோனியார் திருசொரூபம்வரை சென்று சிலுவைப் பாதை நிகழ்வு நிறைவடைந்தது.

அதனைத் தொடர்ந்து லொக்கில் அந்தோனியார் திருசொரூப முன்றலில் பங்குத்தந்தை மற்றும் உதவிப் பங்குத் தந்தை ரன்ஜித லக்ஷான் ஆகியோர் இணைந்து விசேட ஆராதனை பூஜை இடம்பெற்றன.

இளந்த நிகழ்வுக்குத் தலவாக்கலை, கொட்டகலை ஆலய பங்குகளில் இருந்து மக்கள் கலந்து கொண்டனர்.






# பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கி வைப்பு!

(அபு அலா, மட்டு. துஷாரா)

மட்டக்களப்பு ஹெறிடேச்சால் பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கும் நிகழ்வு சந்திவெளி சித்தி விநாயகர் வித்தியாலத்தில் இடம் பெற்றது.

பின்தங்கிய மற்றும் வறுமை நிலையிலுள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் ரோட்டறிக் கழகம் மட்டக்களப்பு ஹெறிடேச்சால் முன்னெடுக்கப்பட்டு வரும் பல்வேறு வேலைத் திட்டங்களில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்ட 57 மாணவர்களுக்கு பாடசாலை பாதணிகள் வழங்கி வைக்கப்பட்டன.



பாடசாலையின் அதிபர் திருமதி டி.சுரேஸ்குமார் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் ரோட்டரி கழகம் க.நவநீதன், ச.ஹரிபிரசாத், தே.நவநீதன் அ.கிறிஸ்டிராஜ் ஆகியோர் கலந்து கொண்டதுடன் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது..

# சாய்ந்தமருது மல்ஹருஸ் வித்தியில் ஸ்மார்ட் வகுப்பறை, நூலகம் திறப்பு!






(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது மல்ஹருஸ் ஷம்ஸ் மகா வித்தியாலயத்தில் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்ட ஸ்மார்ட் வகுப்பறை, அதிபர் அலுவலகம் மற்றும் நூலகத் திறப்பு விழா என்பன பாடசாலை அதிபர் எம்.சி. நஸ்லின் றிப்கா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் கலந்து கொண்டு ஸ்மார்ட் வகுப்பறை, நூலகம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட அதிபர் அலுவலகம் அடங்கிய கல்வி வசதிகளை திறந்து வைத்து மாணவர்களுக்குக் கையளித்தார்.

நிகழ்வில் உரையாற்றிய பாடசாலை அதிபர் எம்.சி. நஸ்லின் றிப்கா, கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கல்வி அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து விருந்தினர்களையும் வரவேற்று நன்றி தெரிவித்தார்.

# பொருள்களை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு எம்மிடம் பெண் முயற்சியாளர்கள் உள்ளனர்!

## மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் சிவப்பிரியா தெரிவிப்பு







**(ஐதுர்சயன்)**

சர்வதேச தரத்துக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு எமது பெண் முயற்சியாளர்கள் உள்ளனர் என்று மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் சிவப்பிரியா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவுக்கு அமைய மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இந்த முறை சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

"பெண் எழும்போது நாடு எழும்" எனும் இவ்வருட கருப் பொருளுக் கமைவாக பல்வேறு நிகழ்வுகள் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம் தலைமையில் பெண்கள் தலைமை தாங்கும் முயற்சியாளர்களின் உள்ளூர் உற்பத்தி கண்காட்சி நிகழ்வு இன்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதன்போது உள்ளூர் ஆடை உற்பத்தி, கைப்பணிப் பொருள்கள், நஞ்சற்ற மரக்கறிகள், பழங்கள், உணவு வகைகள், வீட்டு அலங்காரப் பொருள்கள், தேன், வீட்டு பாவனைப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள், என்பன காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

சர்வதேச தரத்துக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு எமது பெண் முயற்சியாளர்கள் உள்ளார்கள் என இதன்போது பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரெத்தினம் தெரிவித்தார்.

# கினிகத்ஹேனை விக்னேஸ்வராவுக்கு மின்னனு பலகை வழங்கும் நிகழ்வு







**(பசறை நிருபர் நடராஜா மலர்வேந்தன்)**

மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் டிஜிட்டல் கல்வித் திட்டத்தின் கீழ் ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கினிகத்ஹேனை கடவளை விக்னேஸ்வரா கல்லூரிக்கு மின்னணு பலகை (Smart Board) வழங்கி வைக்கப்பட்டது.

பாடசாலைகளில் நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் தலைவர் சிவஞானம் கலந்து கொண்டு மின்னணுப் பலகையைப் பாடசாலைக்கு வழங்கி வைத்தார்.

மன்றத்தின் உறுப்பினர்கள், பாடசாலை அதிபர் சிவகுமாரன், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ஹட்டன் – டிக்கோயா வனப்பகுதியில் தீ!

(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)

ஹட்டன் – டிக்கோயா பிரதான வீதியில் உள்ள அளுத்கம பகுதியில் உள்ள ஒரு காட்டுப் பகுதியில் நேற்று இரவு பெரும் தீ விபத்து ஏற்பட்டது. தீ தற்போது பிரதான வீதியை எட்டியுள்ளது. அளுத்கம மக்கள் அதைக் கட்டுப்படுத்த கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதியில் நிலவும் கடுமையான வறண்ட காலநிலை காரணமாக தீ வேகமாக பரவி வருகிறது. மேலும் தீ விபத்துக்கான காரணம் இன்னும் அதிகார பூர்வமாக வெளியிடப்படவில்லை. இருப்பினும், இந்த வனப்பகுதிக்கு யாரோ ஒரு குழு தீ வைத்திருக்கலாம் என்று அப்பகுதி மக்கள் சந்தேகிக்கின்றனர்.



மத்திய மலைநாட்டில் நிலவும் இந்த வறண்ட காலநிலையால் இதுபோன்ற தீ விபத்துகள், உணர்திறன் வாய்ந்த சுற்றுச்சூழல் அமைப்புகளை அழித்து நீர் ஆதாரங்கள் வறண்டு போகும் அபாயம் உள்ளது. மலைகளின் பல பகுதிகளில் ஏற்கனவே குடி தண்ணீர் பற்றாக்குறை நிலவும் சூழலில், இதுபோன்ற அழிவுகரமான செயல்களால் தற்போதுள்ள நீர் பிரச்சினை மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.







## 3 கோடி ரூபா செலவிலான பழமையான

# கரைச்சைப்பால புனரமைப்புப் பணிகள் இழுத்தடிக்கப்படுவதால் மக்கள் விசனம்

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி வீதியில் உள்ள சுமார் 50 வருட காலம் பழமைவாய்ந்த கரைச்சைப் பாலத்தின் 3 கோடி ரூபா செலவிலான புனரமைப்பு பணிகள் இழுத்தடிக்கப்பட்டு வருவது ஏன் என்று பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

வீதி அபிவிருத்தி திணைக்களம் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதத்தில் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்தது.

இதற்கான பணிகள் கடந்த இரு மாதங்களுக்கு முன்னரே பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருந்த போதிலும், இன்னும் பூர்த்தி செய்யப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருவது ஏன் என பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

தினமும் ஆயிரக்கணக்கான மாணவர்கள், மீன் வியாபாரிகள், பொதுமக்கள் பயன்படுத்தும் இந்தப் பாதை முன்னர் “ஐ” திட்டத்தின் கீழ் கார்ப்பெட் இடப்படும் போது குறித்த பாலம் புனரமைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் அது நடைபெறவில்லை.

இது தொடர்பாக காரைதீவு பிரதேச செயலாளரிடம் கேட்டபோது, அது பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று கூறியுள்ளார்.

இழுத்தடிப்புக்கான காரணம் என்ன? இது எப்போது பூர்த்தி செய்யப்படும்? என்ற விவரங்களைச் சம்பந்தப்பட்டவர்கள் மக்களுக்கு தெரியப்படுத்தி மிக விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பழமை வாய்ந்த இந்தப் பாலம் எப்போது விழும்? என்ற அபாய நிலையில் இருந்ததை ஊடகங்கள் தொடக்கம் பலரும் பல கூட்டங்களிலும் கூறி இருந்த போதும் அது கடந்த பத்து வருட காலம் நிறைவேற்றப்படாமல் உள்ளது.

இதேபோன்று காரைதீவில் மேலும் நான்கு பாலங்கள் இருக்கின்றன.

இருந்த பொழுதிலும் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினர் இவ்வருடம் இந்தப் பாலத்தை மாத்திரம் புனரமைக்கத் திட்டமிட்டு வேலையை ஆரம்பித்து செய்து வருகின்ற போதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளமை தொடர்பில் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



# பசறை கதிரேஷன் தமிழ் வித்தியில் புதிதாக அமைந்த கட்டடம் திறப்பு!





(பசறை நிருபர் நடராஜா மலர்வேந்தன்)

பசறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட மஹதோவ பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ கதிரேஷன் தமிழ் வித்தியாலத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாடிக்கட்டட வகுப்பறை திறப்புவிழா இன்று அதிபர் கே. யோகராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பதுளை மாவட்ட நதடாளுமன்ற உறுப்பினர் கிட்ணன் செல்வராஜ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைத்தார்.

பசறை வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி ஸரீனா பேகம், பசறை பிரதேச சபையின் தலைவர், உறுப்பினர்கள், இணைப்பாளர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.




# தமிழர்களின் பாரம்பரியக் கலையான சிலம்பம் பயிற்சி மன்னாரில் ஆரம்பம்!

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

தமிழர்களின் பாரம்பரிய கலையான சிலம்பம் பயிற்சியானது நேற்று ஞாயிற்றுக்கிழமை மன்னாரில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆசிரியர் மெல்சின் தலைமையில் தமிழர்களின் பாரம்பரிய கலையான சிலம்பம் கலை விழா ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கடந்த 35 ஆண்டுகளாக சிலம்பம் மற்றும் பல பாரம்பரிய கலைகளில் அனுபவம் பெற்றவருமான பிரபல ஆசான் சூசைநாதர் யசோதரன், VMCT கலை மன்றத்தின் இயக்குநர் பொறியியலாளர் சூசைப்பிள்ளை விமலேஸ்வரன் ஆகியோரது நெறிப்படுத்தலில் VMCT கலை மன்றத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்ப விழாவில் மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.











## குடியரசுத் தலைவருக்கு அவமதிப்பு:

# மேற்கு வங்க அரசு அறிக்கை அளிக்க மத்திய உள்துறை செயலாளர் உத்தரவு

மேற்கு வங்கத்துக்குச் சென்ற குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை முறைப்படி வரவேற்காமல் அவமதிப்பு நிகழ்ந்ததாக எழுந்த குற்றச்சாட்டு குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு மாநில அரசுக்கு மத்திய உள்துறைச் செயலர் உத்தரவிட்டுள்ளார்.

மேற்கு வங்கத்தின் சிலிகுரி அடுத்த பிதான் நகரில் 9 ஆவது சந்தாலி பழங்குடியினர் சர்வதேச மாநாடு கடந்த 7 ஆம் திகதி நடைபெற இருந்தது. இதில் பங்கேற்க குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆனால், மாநில அரசு திடீரென கோசாய்பூருக்கு மாநாட்டை மாற்றியது.

இதற்கிடையே, மாநாட்டில் பங்கேற்பதற்காக பாக்டோக்ரா விமான



நிலையத்துக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு சென்றார். மரபுப்படி, குடியரசுத் தலைவரை வரவேற்க மாநில முதல்வரோ, அமைச்சரோ வரவேண்டும். ஆனால், முர்முவை வரவேற்க சிலிகுரி மேயர் கவுதம் தேவ் மட்டுமே வந்திருந்தார். இந்த சூழலில், மாநாட்டில் பேசிய குடியரசுத் தலைவர் முர்மு, “முதல்வர் மம்தா பானர்ஜி என் மீது அதிருப்தியில் இருக்கிறாரா?” என்று வேதனை தெரிவித்தார்.

இந்நிலையில், குடியரசுத் தலைவர் வருகையின் போது நடந்த மரபு மீறல் தொடர்பாக மேற்கு வங்க மாநில தலைமைச்செயலர் நந்தினி சக்ரவர்த்தியிடம் மத்திய உள்துறைச் செயலர் கோவிந்த் மோகன் அறிக்கை கோரியுள்ளார். குடியரசுத் தலைவரை வரவேற்கவும், வழியனுப்பவும் முதல்வர், தலைமைச் செயலர், டி.ஜி.பி ஏன் வரவில்லை?

குடியரசுத் தலைவருக்காக அமைக்கப்பட்டிருந்த கழிவறையில் தண்ணீர் வசதி இல்லாமல் போனது ஏன்? பயணப் பாதையில் குப்பை குவிந்து கிடந்தது ஏன்? இதற்குப் பொறுப்பான டார்ஜிலிங் ஆட்சியர், கூடுதல் ஆட்சியர், சிலிகுரி காவல் ஆணையர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? என்று விளக்கம் அளிக்குமாறு உள்துறைச் செயலர் உத்தரவிட்டுள்ளார்.

# ஜே.டி.யு கட்சியில் இணைந்தார் நிதிஷ் குமாரின் மகன் நிஷாந்த்

## துணை முதல்வராக்க கட்சியினர் ஆதரவு

பிஹார் முதல்வர் நிதிஷ் குமாரின் மகன் நிஷாந்த் குமார் (வயது 50) ஐக்கிய ஜனதா தள கட்சியில் (ஜே.டி.யு) உறுப்பினராக நேற்று சேர்ந்தார். அவரை துணை முதல்வராக்க கட்சி எம்.எல்.ஏக்கள், எம்.பி.க்கள் முடிவு செய்துள்ளனர் என கூறப்படுகிறது.

பிஹாரில் கடந்தாண்டு நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில், தே.ஜ.கூட்டணி அமோக வெற்றி பெற்றது. நிதிஷ் குமார் 10 ஆவது முறையாக பிஹார் முதல்வரானார்.

இந்நிலையில் நிதிஷ் குமாரின் உடல் நிலையில் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் தனது மகன் நிஷாந்த் குமாரை ஐக்கிய ஜனதா தள கட்சியில் அடுத்த வாரிசாக கொண்டுவர முடிவு செய்தார்.

இது குறித்து பா.ஜ.கவுடன் ஆலோசனை நடத்தினார். நிதிஷ் குமார் மாநிலங்களவை எம்.பி. தேர்தலில் போட்டியிடவும், அவரது மகன் நிஷாந்த் குமாரை ஐக்கிய ஜனதா தள கட்சியில் இணைத்து துணை முதல்வராக்கவும், முதல்வர் பதவியை பா.ஜ.க.வுக்கு விட்டுக்கொடுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது என கூறப்படுகிறது. இதையடுத்து அவர் மாநிலங்களவை தேர்தலில் போட்டியிட மனு தாக்கல் செய்தார்.

இந்நிலையில், அரசியலில் இருந்து விலகி இருந்த நிதிஷ் குமாரின் மகன் நிஷாந்த் குமார், ஐக்கிய ஜனதா தள கட்சியில் நேற்று உறுப்பினராக



இணைந்தார். அப்போது கட்சியின் செயல் தலைவரும், மாநிலங்களவை எம்.பி.யுமான சஞ்சய் ஜா, பிஹார் துணை முதல்வர் விஜய் சவுத்ரி மற்றும் மூத்த தலைவர்கள் உடன் இருந்தனர். முதல்வர் நிதிஷ் குமார் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கவில்லை.

நிஷாந்த் குமார் கட்சியில் இணைந்ததும், இளைஞர் அணியினர் கோஷமிட்டனர். கட்சியில் இணைந்த பின், தலைமையகத்துக்கு வெளியே உள்ள ஜெயப்பிரகாஷ் நாராயண் சிலைக்கு நிஷாந்த் குமார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதன்பின் பேட்டியளித்த நிஷாந்த் குமார், “கட்சியில் தீவிர உறுப்பினராக பணியாற்றி, கட்சி நலனை பாதுகாப்பேன். மாநிலங்களவை தேர்தலில் போட்டியிட எனது தந்தை எடுத்த முடிவை மதிக்கிறேன்.” என்றார்.

இது குறித்து கட்சியின் மூத்த தலைவர் ஹரி நாராயண் சிங் கூறுகையில்,

“கட்சியின் முன்னணி தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில், நிஷாந்த் குமாரைத் துணை முதல்வராக்கும் வாய்ப்புகள் குறித்து ஆலோசிக்கப் பட்டது. நிதிஷ் குமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், நிஷாந்த் குமாரை துணை முதல்வராக்க கட்சியின் எம்.எல்.ஏக்கள் மற்றும் எம்.பி.க்கள் அனைவரும் ஒருமனதாக முடிவு செய்தனர்.” - என்றார்.

## ஈரானின் புதிய உச்ச தலைவர்:

# ட்ரம்ப்பின் விமர்சனத்துக்கு ஈரானின் அதிரடிப் பதிலடி

ஈரானின் புதிய உச்ச தலைவராக மொஜ்தபா கமேனி நியமிக்கப்பட்டுள்ளமை சர்வதேச அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் கருத்துக்களுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்த நகர்வு பார்க்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், மொஜ்தபா கமேனியின் நியமனம் குறித்து முன்னர் கருத்துத் தெரிவிக்கையில், அவரை ஒரு தகுதியற்றவர் என வர்ணித்திருந்தார்.

மேலும், ஈரானின் தலைமைத்துவத் தெரிவில் அமெரிக்காவிற்கும் ஒரு பங்கு இருக்க வேண்டும் என அவர் விரும்பியிருந்தார்.

இருப்பினும், இதனை ஈரானிய அரசு தனது தன்னாதிக்கம் மீதான தாக்குதலாகக் கருதுகிறது.

ஈரானின் எதிர்காலத்தை ஈரானே தீர்மானிக்கும், எந்தவொரு வெளிநாடும் இதில் தலையிட முடியாது என்ற வலுவான செய்தியை இந்த



நியமனம் மூலம் ஈரான் உலகிற்கு உணர்த்தியுள்ளது.

யுத்தம் மற்றும் வான்வழித் தாக்குதல்களுக்கு மத்தியில், ஈரானின் அனைத்து முக்கிய அரச மற்றும் பாதுகாப்பு அமைப்புகளும் மொஜ்தபா கமேனிக்குத் தங்களின் முழுமையான ஆதரவை வழங்கியுள்ளன.

புரட்சிகர காவல் படை, ஆயுதப் படைகள் மற்றும் பசிஜ் துணை இராணுவப் படை, ஜனாதிபதி, நாடாளுமன்ற சபாநாயகர், பாதுகாப்பு மற்றும் உளவுத்துறை அமைச்சகங்கள் என்பன ஆதரவை வழங்கியுள்ளன.

ஈரானை நிலைகுலையச் செய்ய நினைக்கும் சக்திகளுக்கு, நாடு பிளவுபடவில்லை மாறாக ஒற்றுமையுடன் இருக்கிறது என்பதைக் காட்டும் ஒரு சான்றாக இந்த ஆதரவு பார்க்கப்படுகிறது.

ஈரானிய மக்கள் தங்கள் புதிய உச்ச தலைவரைக் காணவும், அவரது உரையைக் கேட்கவும் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

இதுவரை மொஜ்தபா கமேனி பொதுவெளியில் தோன்றவோ அல்லது நாட்டு மக்களுக்கு உரையாற்றவோ இல்லை.

தற்போதுள்ள மிக நெருக்கடியான போர்ச் சூழலில், அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்பதால் பாதுகாப்பு காரணங்களுக்காக அவர் ரகசியமான இடத்தில் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதேவேளையில், மக்களுடன் தொடர்புகொள்வதில் உள்ள தொழில்நுட்ப மற்றும் பாதுகாப்பு சவால்களே இந்தத் தாமதத்திற்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுவதாக அல்ஜெசீரா செய்தி வெளியிட்டுள்ளது.



## சர்வதேச எரிசக்தி நெருக்கடி:

# அவசரகால எண்ணெய் இருப்புகளை பகிர்ந்து கொள்ள ஜி7 நாடுகள் திட்டம்

சர்வதேச சந்தையில் நிலவும் எரிசக்தி நெருக்கடியைச் சமாளிக்க, தமது அவசரக்கால எண்ணெய் இருப்புகளை கூட்டாக வெளியிடுவது குறித்து ஜி7 நாடுகளின் நிதியமைச்சர்கள் இன்று ஆலோசனை நடத்தவுள்ளனர்.

சர்வதேச எரிசக்தி முகமையுடன் ஒருங்கிணைந்து, இந்த எண்ணெய் இருப்புகளைச் சந்தைக்கு விடுவிப்பது குறித்து 'பைனான்சியல் டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு அமெரிக்கா உள்ளிட்ட மூன்று ஜி 7 நாடுகள் ஏற்கனவே தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

உலகளாவிய ரீதியில் அதிகரித்து வரும் மசகு எண்ணெய் விலையைக் கட்டுப்படுத்தவும், விநியோகத் தடையைச் சீர்செய்யவும் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இன்றைய ஆலோசனையின் முடிவில் இது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாக அல்ஜெசீரா செய்தி வெளியிட்டுள்ளது.



# பஹ்ரைன் மீது ஈரான் தாக்குதல் சிறுவர்கள் உட்பட 32 பேர் காயம்

பஹ்ரைனின் சித்ரா பகுதியில் ஈரான் நடத்திய ஆளில்லா விமான தாக்குதலில் 32 பேர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு உத்தியோகபூர்வ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

காயமடைந்தவர்களில் நான்கு பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதோடு அதில் அறுவை சிகிச்சை தேவைப்படும் சிறுவர்களும் அடங்குவர் என பஹ்ரைன் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பஹ்ரைன் தலைநகர் மனாமாவுக்குத் தெற்கே அமைந்துள்ள சித்ரா பகுதியை இலக்கு வைத்து ஈரான் இந்த ஆளில்லா விமான தாக்குதலை நடத்தியதாக பஹ்ரைன் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இப்பகுதியில் நிலவி வரும் இராணுவ மோதல்களுக்கு மத்தியில், பொதுமக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாதுகாப்பு நிலவரங்களைக் கருத்திற்கொண்டு, பொலிஸார் அப்பகுதியில் பாதுகாப்பைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.









## பாதுகாப்பு அச்சுறுத்தல்:

# சவூதியிலிருந்து அவசியமற்ற ஊழியர்களை வெளியேறுமாறு அமெரிக்கா அதிரடி உத்தரவு

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சு, சவூதி அரேபியாவில் உள்ள அத்தியாவசியமற்ற அரச ஊழியர்களையும், அனைத்து பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களையும் பாதுகாப்பு அபாயங்கள் காரணமாக அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெப்ரவரி 28 அன்று ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் போரைத் தொடங்கிய பின்னர், சவூதி அரேபியாவிலிருந்து வெளியேறுமாறு அந்த திணைக்களம் கட்டாய உத்தரவு பிறப்பிப்பது இதுவே முதல் முறையாகும். சவூதி அரேபியா மீது ஈரான் நடத்தும் தாக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

முன்னதாக, அல்-கர்ஜ் பகுதியில் உள்ள குடியிருப்பு கட்டடம் ஒன்றின் மீது ஏவுகணை விழுந்ததில் குறைந்தது இரண்டு பேர் உயிரிழந்தனர் என சவூதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் தலைநகர், ஒரு விமான தளம் மற்றும் ஒரு எண்ணெய் வயல் ஆகியவற்றின் மீது நடத்தப்பட்ட பல ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை முறியடித்துள்ளதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

செயற்கை நுண்ணறிவு மோசடிகள் அதிகரிப்பு



C2



# மத்திய கிழக்கு போர் பதற்றம் காரணமாக கனடாவிடம் எரிவாயு வாங்க இந்தியா முடிவு

மத்திய கிழக்கு போர் பதற்றம் காரணமாக கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதால்,அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளில் இருந்து எரிவாயு வாங்க இந்தியா முடிவு செய்துள்ளது.

இந்தியாவுக்கு எரிவாயு விநியோகம் செய்ய அவுஸ்திரேலியா, கனடா ஆயிர நாடுகளும் முடிவு செய்துள்ளன. ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் கச்சா எண்ணெய் செல்லும் முக்கிய வழித்தடமான ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடி உள்ளது.

இதனால் உலக நாடுகளுக்கு கச்சா எண்ணெய் எடுத்து செல்வது பாதிக்கப்பட்டுள்ளது.

C03

# யூத எதிர்ப்பு நடவடிக்கைகளை வன்மையாக கண்டிக்கின்றோம்

## கரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு

கனடாவில் யூதர்களின் வழிபாட்டு தலங்களை குறிவைத்து இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவங்களை கனடா பொது பாதுகாப்பு அமைச்சர் கெரி ஆனந்தசங்கரி கடுமையாக கண்டித்துள்ளார்.

அண்மையில் டொராண்டோ பெரும்பாக பகுதியில் உள்ள பல யூத வழிபாட்டுதலங்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவங்கள், யூத விரோத வன்முறைகள் அதிகரித்து வருவதற்கான கவலைக்கிடமான அடையாளமாக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.



இந்தச் சம்பவத்தை மிகக் கடுமையாக நான் கண்டிக்கிறேன் எனவும் இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யூத விரோதம் வன்முறையாக மாறும் நிலை கனடாவின் வழி அல்ல. இதை எங்களால் சகிக்க முடியாது; இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என கரி ஆனந்தசங்கரி கூறியுள்ளார்.

மேலும், வெறுப்பு குற்றங்களை தடுக்கும் நடவடிக்கைகளில் பொலிஸுடன், பிற அரசாங்க நிலைகளுடன் கூட்டாக மத்திய அரசு தொடர்ந்து செயல்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கனடாவில் வாழும் ஒவ்வொரு யூத குடிமகனும் பாகுபாடு மற்றும் யூத விரோதத்திலிருந்து விடுபட்டு பாதுகாப்பாக வாழ உரிமை பெற்றவர்கள். ஒரு வழிபாட்டுத் தலங்களை தாக்குவது என்பது கனடாவையே தாக்குவதற்கு சமம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

C03



# ஒன்டாரியோவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் பலி

## இருவர் படுகாயம்

கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்தில் உள்ள ஸ்குகோக் நகராட்சிப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை இரண்டு வாகனங்கள் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற இடம்பெற்ற விபத்தில் சிக்கி, ஒருவர் உயிரிழந்துள்ளார். இருவர் காயமடைந்துள்ளனர்.

ஒன்டாரியோ மாகாண பொலிஸ் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, மார்ச் 8 ஆம் திகதி காலை சுமார் 5.55 மணியளவில், போர்ட் பேரி பகுதியில் உள்ள Highway 7/12 மற்றும் 4th Line அருகே இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்திசைகளில் பயணித்துக் கொண்டிருந்த இரண்டு வாகனங்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டுள்ளன.

இந்த விபத்தில் சண்டர்லேண்ட் பகுதியைச் சேர்ந்த 53 வயதுடைய ஆண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

மேலும், இன்னிஸ்ஃபில் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஒருவர் உயிருக்கு ஆபத்தில்லாத காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

அதேவேளை, நோர்த் யோர்க் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவர் கடுமையான காயங்களுடன் ஹெலிக்கொப்டரின் மூலம் பிராந்திய அவசர சிகிச்சை மையத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். விபத்து குறித்த விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகா ரிகள் தெரிவிக்கின்றனர்.






# செயற்கை நுண்ணறிவு மோசடிகள் அதிகரிப்பு

கனடாவில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நடைபெறும் மோசடிகள் வேகமாக அதிகரித்து வருகின்றன என டொராண்டோ பொலிஸார் எச்ச ரிக்கை விடுத்துள்ளது.

இந்த புதிய முறைகள் காரணமாக மோசடிகளை கண்டறிவது முன்னைவிட மிகவும் கடினமாகிவிட்டதாக விசாரணை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த இரண்டு முதல் மூன்று ஆண்டுகளாக செயற்கை நுண்ணறிவு குறித்து கேள்விகள் எழுந்தாலும், அதன் உண்மையான தாக்கம் 2025 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்துதான் தெளிவாகத் தெரியத் தொடங்கியதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மோசடி முறைகள் மாறவில்லை எனவும் ஆனால் செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படுவதால் மோசடிக்காரர்கள் செய்யும் உளவியல் தந்திரங்கள் மிகவும் குறிவைத்ததாகவும் நம்பத்தகுந்ததாகவும் மாறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காதல் மோசடி, போலி அதிகாரி அல்லது வங்கி அதிகாரி போல நடிக்கும் மோசடிகள் போன்றவை இன்னும் தொடர்ந்தாலும், செயற்கை நுண்ணறிவு காரணமாக அவை மிகவும் நம்பத்தகுந்ததாக மாறியுள்ளன எனவும் பொலிஸ் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், இணையத்தில் கிடைக்கும் தகவல்களை செயற்கை நுண்ணறிவு தொகுத்து மோசடிக்காரர்களுக்கு வழங்குவதால், பாதிக்கப்பட்டவர்களின் வங்கி அட்டை எண்களின் கடைசி நான்கு இலக்கங்கள், மின்னஞ்சல் முகவரி மற்றும் குடும்ப உறுப்பினர்களின் பெயர்கள் போன்ற தகவல்களையும் அவர்கள் அறிந்து கொள்ள முடிகிறது எனவும் எச்சரித்துள்ளனர்.







# ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைகின்றதா கனடா?

கனடா ஒரு வட அமெரிக்க நாடு! உலக வரைபடத்தைப் பார்த்தாலே, கனடாவும் அமெரிக்காவும் வெறும் ஒரு எல்லைக்கோட்டினால் பிரிக்கப்பட்டிருப்பது தெளிவாகத் தெரியும்.

அப்படியிருக்கும் நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கொடுத்து வரும் தொல்லையால், பேசாமல் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து விடலாமா என்னும் எண்ணம் கனடாவுக்கு உருவாகிவருவதுபோல் தெரிகிறது.

குறிப்பாக, மார்க் கார்னி கனடாவின் பிரதமராக பொறுப்பேற்றதிலிருந்தே, அதுவும், ட்ரம்ப் கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக இணைக்கப்போவதாக மிரட்ட, கூடுதலாக வரிகளை விதிக்க, அமெரிக்காவை சார்ந்திருப்பதைக் குறைப்பதற்காக, ஐரோப்பிய ஒன்றியம் பக்கம் சாய்ந்துவருகிறது கனடா.

'ஐரோப்பா அல்லாத நாடுகளில், மிகவும் ஐரோப்பிய நாடாக திகழும் கனடா, ஒரு சிறந்த உலகத்தை உருவாக்க, முதலில் ஐரோப்பிய ஒன்றியத்தையே நோக்கிப்பார்க்கிறது' என்று கடந்த ஜூன் மாதம் பிரஸ்ஸல்ஸில் நடந்த ஐரோப்பிய ஒன்றிய - கனடா உச்சி மாநாட்டில் பேசினார் கனடா பிரதமரான மார்க் கார்னி.

அந்த தருணத்திலிருந்து, கனடாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையே ஒரு நிலையான மற்றும் ஆழமான ஒருங்கிணைப்பு உருவாகி வருகிறது.

அதன் பின்னர், கனடா ஐரோப்பிய ஒன்றியத்துடன் பாதுகாப்புக் கூட்டாண்மை ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது.

அத்துடன், இந்த வாரம் இரு தரப்பினரும் தங்கள் தற்போதைய தடையில்லா வர்த்தக ஒப்பந்தத்தை மேலும் மேம்படுத்த ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஆக, வட அமெரிக்க நாடான கனடா, ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைகிறதா, அது சாத்தியமா என்னும் கேள்விகள் எழுந்துள்ளன.

நிபுணர்களிடம், ஐரோப்பிய ஒன்றியத்துடன் கனடா இணைவது குறித்து விவாதித்தால், அது சாத்தியமே என்கிறார்கள் அவர்கள்.

கனடா, ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்தால், அது கனடாவின் அடையாளத்தை நீர்த்துப்போகச் செய்யாது, மாறாக, உலகின் மீதான கனடாவின் தாக்கத்தை அது அதிகரிக்கத்தான் செய்யும் என்கிறார் வரலாறு மற்றும் பொருளாதார நிபுணரான Augusto Lopez Claros என்பவர்.

கடந்த கோடையில், கனடா ஐரோப்பிய ஒன்றியத்துடன் நெருக்கமான கூட்டாண்மையை விரும்புவதாகவும், ஆனால் அதில் உறுப்பினராக விரும்பவில்லை என்றும் கார்னி கூறினார்.

ஆனால், பாதிக்கும் சற்று குறைவான கனேடியர்கள், கனடா ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணையும் இந்த யோசனையை ஆதரிப்பதாக Abacus Data என்னும் ஆய்வமைப்பு தெரிவிக்கிறது.

Abacus Data அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரியான David Coletto, கனடா ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவது தொடர்பில் ஒரு கேள்வி எழுமானால், ஏற்கனவே அமெரிக்கா தங்களுக்கு துரோகம் செய்துவிட்டதாக கனேடியர்கள் கருதும் நிலையில், அவர்களில் பலர் அதற்கு ஆதரவளிப்பார்கள் என தான் நம்புவதாக தெரிவிக்கிறார்.

அதே நேரத்தில், அப்படி கனடா ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணையுமானால், கனடா தனது இறையாண்மையை தியாகம் செய்ய நேரிடும் என்கிறார் வர்த்தகத்துறை நிபுணரான Meredith Lilly என்பவர்.

அப்படி கனடா ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணையும்போது, கனடாவின் வர்த்தக் கொள்கைகள் தொடர்பில் முடிவுகள் எடுப்பது ஐரோப்பிய நாடாளுமன்றமாகத்தான் இருக்குமேயொழிய கனடாவாக இருக்காது என்கிறார் அவர்.

ஆக, கனடா ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவதை விடவும், ஜேர்மனி, முக்கிய ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், பிரித்தானியா, ஜப்பான், தென்கொரியா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்துடன் இணைந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

அந்த நாடுகளின் கூட்டமைப்பு, அமெரிக்கா போன்ற தொல்லை கொடுக்கும் நாடுகளை எதிர்த்து நிற்கவேண்டும் என்கிறார் கனடா அமெரிக்க உறவுகள் நிபுணர்கள் குழுவின் தலைவரான Fen Osler Hampson என்பவர்.

## மத்திய...

(தொடர்ச்சி)

இந்நிலையில், கச்சா எண்ணெய்க்கான மாற்று வழிகளை இந்தியா ஆராய்ந்து வருகிறது. அதன்ஒரு பகுதியாக அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளிடமிருந்து கூடுதலாக எரிவாயுவை இறக்குமதி செய்ய இந்தியா திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்த நடவடிக்கை கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு விநியோகத்தில் ஒரு துறை அல்லது வழியை மட்டுமே நம்பியிருப்பதை தவிர்க்கிறது.

மேலும், இது இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்ய உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ரஷ்யா, மேற்கு ஆபிரிக்கா, அமெரிக்கா மற்றும் வளைகுடா அல்லாத மத்திய கிழக்கு வழித்தடங்களில் இருந்தும் இந்தியா எரிசக்தியை வாங்குவதால் தற்போதைய நிலைமையை சமாளிக்க முடியும் என தகவல்கள் தெரிவித்துள்ளன.

## யூத எதிர்ப்பு...

(தொடர்ச்சி)

இந்நிலையில், டொராண்டோ மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களில் இடம்பெற்ற இந்த தாக்குதல்கள் குறித்து பொலிஸ் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளதுடன், யூத சமுதாயப் பகுதிகளில் கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.